DINATHANTHI-21-MAR-2018

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு

ஐ.நா சபையில் சத்குரு ஜக்கி வாசுதேவ் இன்று பேசுகிறார்

கோவை, மார்ச்.21–

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் அமைந்திருக்கும் ஐ.நா. சபையில் முறையான தண்ணீர் மேம்பாடு குறித்த 10 ஆண்டுகள் செயல்திட்ட தொடக்க விழா நாளை (வியாழக்கிழமை) நடக்கிறது.

இதில் கலந்து கொள்ள ஐ.நா சபை தலைவர் மிராஸ்லஜ்காக் அழைப்பு விடுத்த தன் பேரில் கோவை ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் பங்கேற்கிறார். மேலும் ஐ.நா. சபை சார்பில் 2028–ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தண்ணீர் பயன்பாடுகளில் மேம்பாட்டுக்கான இலக்குகளை செயல்படுத்துவது குறித்து ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவில் சத்குரு ஜக்கி வாசுதேவ் ஒரு உறுப்பினராக பங்கேற்று இன்று (புதன்கிழமை) ஐ.நா. சபையில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொண்டு தண்ணீர், சுகாதாரம் மற்றும் பெண்கள் முன்னேற்றம் என்ற தலைப்பில் பேசுகிறார்.

இதனை http://webtv.un.org/ என்ற இணையதளத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. இதனை பொதுமக்கள் பார்க்கலாம்.